2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருப்பூரில் புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் இந்து-முஸ்லீம் பீடித் தொழிலாளர்கள் வெளியேற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் அரசு புறம்போக்கு நிலங்களில் இந்து-முஸ்லீம் பீடித் தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கானவர்கள் குடிசைகளைக் கட்டிக்கொண்டு 20 வருஷங்களுக்கு மேலாக தீர்வை செலுத்தி வசித்து வருபவர்களை திடீரென்று காலி செய்யும்படி கூறுவதானாலும், அப்பகுதியில் வகுப்புக் கலவரம் ஏற்படக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளதாலும் அப்பகுதி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்று கேட்டு திருவாளர்கள் கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ப. சுந்தரம், து. வேணுகோபால் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் கோவிலுக்கு எதிரிலுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் கடந்த 20, 25 ஆண்டுகளாக அங்கே வசிக்கின்ற பீடித் தொழிலாளர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள், இன்னும் பல்வேறு வகுப்பினர் குடிசைகள் போட்டு வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே இந்து முன்னணி என்ற பெயரில் நோட்டீஸ் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் வருகிற சித்திரை, வைகாசி மாதங்களுக்குள் அந்த இடத்தை அவர்கள் காலி செய்யாவிட்டால் அவர்களை அப்புறப் படுத்தாவிட்டால் குடிசைகளுக்கு தீயிட்டு கொளுத்துவோம் என்று சொல்லி அச்சுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் இது பற்றி பரிபூரணமாக விவாதித்து முடிவு செய்ய அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு ப. சுந்தரம்: தலைவரவர்களே, திருப்பத்தூர் நகரில் எல்லம்மன் கோவில், ஈஸ்வரன் கோவில் ஆஞ்சனேயர் கோவில் என்ற மூன்று கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்களுக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படுகிற அந்த இடத்திலிருக்கிற வீடுகளை காலி செய்யவேண்டுமென்று, இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லப் படுகிற இந்து சமதர்ம கட்சியினர் சொல்லியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நான் ஞாயிற்றுக்கிழமை அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தேன். எல்லம்மன் கோவில் என்பது—இப்போது அங்கே கோவில் இல்லை; அங்கே ஒரு பழைய மண்டபம்தான்

இருக்கிறது. இருந்தாலும் கோவிலுக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படுகிற அந்தப் பகுதியிலே ஏறத்தாழ20, 25 ஆண்டுகளாக 200 குடிசைகள் போட்டு வாழ்ந்து வருகிறார்கள். இதைபோன்ற பிரச்சினை இதற்கு முன்னால் பலதடவை எழுந்திருக்கிறது. இருந்தாலும் இந்தப் பிரச்சினைப்பற்றி இந்த சட்டமன்றத்தில் விரிவாக விவாதிக்க, இந்து முஸ்லீம் கலவரம் ஏற்படாமல் இருக்க, இந்த அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டுவந்திருக்கிற ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. ஆனால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் இந்து-முஸ்லீம் கலவரம் வரும், மதமாச்சரியம் வரும் என்று குறிபிட்டு, அதேநேரத்தில் 20 25 ஆண்டு காலமாக இந்துக்களுக்கும் முஸ்லீம்களும்தான் அங்கே குடிசைகள் போட்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். குடிசைகள் போட்ட பிறகு இன்றைக்கு இந்துக்கள், முஸ்லீம்கள் என்று சொல்லி, அவர்களை அப்புறப்படுத்த முயல்கிறார்கள் என்று சொல்லும்போது, இந்துக்களையும் அப்புறப்படுத்த முயலுகிறார்கள், முஸ்லீம்களையும் அப்புறப்படுத்த முயல்கிறார்கள் என்றுதான் இரு உறுப்பினர்களும் கூறியதிலிருந்து நான் தெரிந்துகொள்கிறேன். ஆகவே, இந்துக்களும் முஸ்லீம்களும் அங்கே இருக்கும்போது மதமாச்சரியம் வருவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தபிறகு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விவரம் கேட்கப்பட்டது. அங்கேயிருந்து எனக்குத் தரப்பட்ட அறிக்கைப்படி, இந்து முன்னணியினர் என்ற அமைப்பு வழங்கிய துண்டு பிரச்சாரம் சிறிது காலம் பரபரப்பை ஏற்படுத்தியது என்றும் அந்த செய்தி அறிந்து திருப்பத்தூர் துணை ஆட்சியர், திருப்பத்தூர் துணை போலீஸ் கண்காணிப்பாளர் ஆகியோர் விசாரித்து, திருப்பூரில் புலன் எண். 768 (1) மற்றும் 704-ன்படி அநதக் குடிசைப் பகுதிகளை நேரில் சென்று பார்த்தார்கள். அந்த நிலத்தை நத்தம் புறம்போக்கு என்றும், ஆஞ்நேயர் சன்னதி என்றும் கிராமக் கணக்கில் வகைப்படுத்தியிருக்கிறார்கள். திருப்பத்தூர் துணை ஆட்சியர் அங்கே உள்ள இந்து தலைவர்களையும், முஸ்லீம் தலைவர்களையும் 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாளன்று அழைத்து, கூட்டத்தைக் கூட்டி, அமைதி காக்க ஆவன செய்ய வேண்டுமென்றும், தீவிர நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்றும் எடுத்துரைத்தார். இரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் பதட்ட நிலை போக்கப்படவும், அமைதி காக்கப்படவும்

இசைந்துள்ளனர். மேற்கொண்டு ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் நடவடிக்கையை உடனடியாகச் செய்ய வேண்டாம் என்றும் இன்றைக்கு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருப்பூர் நகருக்கு நேரில் சென்று, திருப்பத்தூர் துணை ஆட்சியருடன் கலந்து பேசி, நிலைமையைத் தெரிந்துகொண்டிருக்கிறார்.

[முற்பகல் 10.10]

தகாத சம்பவம் எதுவும் நிகழவில்லை. அங்கு தற்சமயம் முழு அமைதி நிலவி வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து அறிக்கை வந்திருக்கின்றது. வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திருப்பத்தூரில் நகரில் ஏற்பட்ட பதட்ட நிலை முற்றிலும் மாறி அசம்பாவிதமான நிகழ்ச்சி எதுவும் இன்றி அமைதியாக நிலைமை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

3. அறிவிப்பு.

(அ) நிதியமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க கவன ஈர்ப்பு ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு திரு. இரெ. இராசமாணிக்கம், திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மேலவையில் பதிலளிக்க வேண்டி இருப்பதால் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

வேதாரண்யம் பகுதியில் காலரா நோய்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேதாரண்யம் பகுதியில் காலரா பரவியுள்ளதால் சிலர் இறந்தது குறித்து திருவாளர்கள் எம். எஸ். மாணிக்கம், என். விஜயபாலன் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.